# ஒவ்வொருவரும் முக்கியமானவர்களே (யோவான் 4:1-42)

*சிறு பிள்ளைகளின் மனவியல் மருத்துவருக்கு, ஏழு வயதுச் சிறுவன் ஒருவன் பின் வரும் குறிப்பை எழுதி அனுப்பினான்:*

> *அன்பான மருத்துவர் கார்ட்னர் அவர்களே,*
>
> *என்னை கவலைக்குள்ளாக்கிய ஒரு சம்பவம் அநேக நாட்களுக்கு முன்பு நடந்தது. ஒரு பெரிய பையன், அவன் வயது 13 இருக்கலாம். அவன் என்னை ஆமை என்று அழைத்தான்; ஏனென்றால் எனது முகத்தில் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை செய்து கொண்டுள்ளேன். என் உதட்டின் அமைப்பைக் கண்டால் தேவன் என்னை வெறுப்பார், என்று எண்ணுகின் றேன். நான் மரிக்கும் போது அநேகமாக அவர் என்னை நரகத்திற்கு அனுப்புவார் என்றே நான் நினைக்கிறேன்.*
>
> *அன்புடன், கிறிஸ்*[1]

*தன்னைப் பற்றின தாழ்வான எண்ணத்தில் இன்றைய நாட்களில் அநேகர் உபத்திரவப்பட்டுக் கொண்டுள்ளனர். இதை "தாழ்வு மனப்பான்மை" என்று நாம் சொல்கிறோம். எப் படி இது அழைக்கப்பட்டாலும், இதைக் கொண்டுள்ளவர்கள் தாங்கள் மதிப்பிற்குறியவர்கள் அல்ல என்றே எண்ணுகிறார்கள்.*

*"ஒவ்வொருவரும் முக்கியமாவனர்களே" என்று வலியுறுத் தவே நாங்கள் விரும்புகிறோம். நமது வேதபாடப் பகுதி யோவான் 4ம் அதிகாரம் ஆகும். புதிய ஏற்பாட்டின் வேறு எந்தப் பகுதியைக் காட்டிலும், யோவான் 4 இயேசுவின் தன்மைகளை அதிக மாகக்கூறுகிறது, என்று சொல்லப்பட்டு வருகிறது.*

## புதுமையான ஒரு முடிவு (யோ. 4:1-4)

*நமது பாடத்திற்கான பின்னணியை யோவான் 3 நமக்குத்*

தருகின்றது. இயேசு பஸ்கா பண்டிகைக்குச் சென்றிருந்தார். பண்டிகையின் போது ஒரு இரவில், யூதர்களின் அதிகாரிகளில் குறிப்பிடத்தக்க ஒருவரான நிக்கொதேமு என்பவரிடம் உரையாடினார். அவ்வுரையாடலில் யோவான் 3:16ல் உள்ள அழகு மிக்க வார்த்தைகள் வந்தன. பண்டிகைக்குப் பின்பு இயேசு யூதேயாவிலேயே சில நாள் தங்கி ஜெயமுள்ள ஊழியம் செய்தார். இந்த வெற்றியானது யோவான் ஸ்நானனின் சீஷர்கள் சிலரிடம் முரண்பாட்டைக் கொண்டு வந்தது. இருப்பினும் இயேசு மிகவும் கவலைப்பட்ட ஒரு உண்மை 4:1ல் குறிப்பிடப்பட்டுள்ளது: "யோவானைப் பார்க்கிலும் இயேசு அநேகம் பேரைச் சீஷராக்கி ஞானஸ்நானம் கொடுக்கிறாரென்று பரிசேயர் கேள்விப்பட்டதாகக் கர்த்தர் அறிந்த போது." பரிசேயர்களுடன் நேருக்கு நேர் மோதக்கூடிய சூழ்நிலையானது, குறித்த காலத்துக்கு முன்பே தமக்கு மரணத்தைத் தரும் என்பதால் இயேசு அதைத் தவிர்க்க விரும்பினார். எனவே, இயேசு யூதேயாவை விட்டு கலிலேயாவின் வடக்குப் பகுதிக்குச் சென்றார்.

இது நமக்கு பின் வரும் புதுமையான வசனத்தைக் கொண்டு வருகிறது: "அவர் சமாரியா நாட்டின் வழியாகப் போக வேண்டியதாயிருந்தபடியால்" (வ. 4). பலஸ்தீனிய தேசம் கீழிருந்து மேலாக சுமார் 120 மைல் நீளம் இருந்தது. இந்த 120 மைல்களுக்குள் மூன்று திட்டவட்டமான எல்லைகள் இருந்தன. வடக்குக் கடைசியில் கலிலேயாவும், தெற்குக் கடைசியில் யூதேயாவும், இவைகளின் மத்தியில் சமாரியாவும் இருந்தன. சமாரியாவின் நடுவாகப் போவதைத் தவிர்க்க சாதாரணமாக யூதர்கள் எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் போவார்கள். அவர்கள் கிழக்கே சென்று யோர்தான் நதியைக் கடந்து, வடக்கே பெரேயா நோக்கிச் சென்று கலிலேயாக் கடல் வரை சென்றிருக்க முடியும். பின்பு அங்கிருந்து யோர்தான் நதியைக் கடந்து கலிலேயா தேசத்திற்குள் சென்றிருக்க முடியும். நேராக வடக்கே சென்றால் மூன்று நாட்களும், சுற்று வழியில் சென்றால் ஆறு முதல் ஒன்பது நாட்களும் பயணத்திற்குத் தேவைப்படும். இது தோராயமாக பெங்களூர் நகரிலிருந்து மதுரை நகரின் வழியாக சென்னை நகரத்திற்குச் செல்லுவதற்குச் சமமானதாகும்.[2]

இயேசு ஏன் சமாரியா வழியாகச் செல்ல வேண்டியிருந்தது? யோவான் ஸ்நானன் காவலில் வைக்கப்பட்டதால்[3] இயேசு அவசரமாய்ச் சென்றார், என்று ஆலோசிக்கப்படுகிறது. இதன் மூலம் யோவான் ஸ்நானனின் சீஷர்கள் சிதறிப்போவதைத் தவிர்க்க அவர் விரும்பினார் எனலாம். ஆனால் இயேசு சீகார் ஊரில் இரண்டு நாட்கள் தாமதித்திருந்த நிகழ்ச்சி இந்த ஆலோசனையைப் புறம்பே தள்ளுவதாயுள்ளது. நான் ஆலோசிப்பது என்னவென்றால், அவர் சமாரியா நாட்டின் வழியாய்ப் போனதற்கு, அங்கிருந்த ஒரு விசேஷித்த ஸ்திரீயும், ஒரு பட்டணம் நிறைய இருந்த விலையேறப் பெற்றுள்ள-ஆவிக்குரிய அறுவடைக்காக பழுத்துக் காத்திருந்த ஜனங்கள்-ஆத்துமாக்களுமேயாகும். ஒவ்வொருவரும் தேவனுடைய பார்வையில் முக்கியமானவர்கள் என்பதால் அவர் சமாரியா நாட்டின் வழியாகப் போக வேண்டியிருந்தது.

## பாவம் நிறைந்த ஒரு ஸ்திரீ (யோ. 4:5-8)

எனவே, "யாக்கோபு தன் குமாரனாகிய யோசேப்புக்குக் கொடுத்த நிலத்துக்கு அருகே இருந்த சமாரியாவிலுள்ள சீகார் என்னப்பட்ட ஊருக்கு வந்தார்" (வ. 5). சீகார் என்ற ஊர் ஏறக்குறைய எல்லையிருந்து பாதி தூரம் உள்ளதாகும். "அங்கே யாக்கோபுடைய கிணறு இருந்தது" (வ. 6அ). "இதுதான் அந்த இடம்" என்று உறுதியாகச் சுட்டிக்காட்டும் நிலையில் உள்ள ஒரு சில (வேதாகம காலத்து) இடங்களில் இந்தக் கிணறும் ஒன்றாகும். இந்தக் கிணறு இன்றும் பழங்காலத்தில் சீகார் ஊர் இருந்த இடத்திலிருந்து அரை மைல் தொலைவில் உள்ளது.

"இயேசு பிரயாணத்தினால் இளைப்படைந்தவராய் அந்தக் கிணற்றினருகே உட்கார்ந்தார்" (வ. 6ஆ). இயேசு தேவனுடைய குமாரன் என்று ஜனங்கள் ஏற்றுக் கொள்வதற்காக சுவிசேஷம் எழுதிய யோவான் (யோவா. 20:30-31) மற்ற எந்த சுவிசேஷகர்களைப் பார்க்கிலும் இயேசுவின் மனிதத்தன்மையை அதிகமாய்க் கூறியுள்ளார். "தாகமாயிருக்கிறேன்" (யோவான் 19:28) என்று இயேசு சிலுவையின் மேலிருந்து கூறியதை யோவான் தான் எழுதினார். நம்மைப்போலவே இயேசுவும் களைப்பு, தாகம், பசி, இளைப்பு ஆகியவைகளைப் பெறக் கூடியவராயிருந்தார்.

யூதர்களின் கணக்கின்படி[4] "அப்பொழுது ஏறக்குறைய ஆறாம் மணி வேளையாயிருந்தது" (வ. 6இ). அதாவது ஏறக் குறைய நண்பகல் வேளையாகும். வசனம் 7ல் "அவருடைய சீஷர்கள் போஜன பதார்த்தங்களைக் கொள்ளும்படி ஊருக் குள்ளே போயிருந்தார்கள்" என்று குறிப்பிடுகிறது. முதல் நூற் றாண்டில் இருந்திருக்கக்கூடிய ஒரு மளிகைக் கடை அல்லது உணவுச் சாலைக்கு அவர்களை உணவு வாங்கி வரும்படி இயேசு அனுப்பியிருந்தார்.[5]

"அப்பொழுது சமாரியா நாட்டாளாகிய ஒரு ஸ்திரீ தண்ணீர் மொள்ள வந்தாள்" (வ. 8அ). இந்த சில வார்த்தைகள் அந்தப் பெண்ணைப் பற்றி ஏராளமாய்ப் பேசுகின்றன. பெரும்பாலும் மதிய வேளைகளில் பெண்கள் தண்ணீர் எடுக்க வருவதில்லை. நாளின் குளிர்ச்சியான வேளையாகிய காலை அல்லது மாலையில்தான் அவர்கள் தண்ணீர் எடுப்பார்கள். தண்ணீர் எடுக்கச் செல்வதென்பது ஒரு சமுதாய நிகழ்ச்சியாகவும், சமூக விழாவாகவும் இருந்தது. பெண்கள் ஒருவரையொருவர் சந்தித்து செய்திகளைப் பெறுவார்கள். இருப்பினும் இந்தப் பெண் வெப்பமான மதிய வேளையில் வந்தாள். மேலும், புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் சீகார் ஊரின் அருகே இருந்த நீரூற்றுகளைக் கண்டறிந்துள்ளனர். இந்தப் பெண் தண்ணீர் எடுக்க அரை மைல் தூரம் நடந்து வந்தாள். இந்த ஊர்ப் பெண்களைப் பொறுத்த மட்டில் இவள் சமூகத்தால் ஒதுக்கி வைக்கப்பட்டவளாக இருந்திருக்க வேண்டும். இவள் தன்னை மற்றவர்கள் ஏசுவதையும், கிசு கிசுப்பதையும் தவிர்க்கவே இப்படிச் செய்தாள் என்று தோன்றுகிறது.

## வியப்பான ஒரு வேண்டுகோள் (யோவான் 4:7, 9)

இயேசு அவளை நோக்கி, "தாகத்துக்குத் தா" என்றார். எனவே அந்த சமாரியப் பெண் அவரை நோக்கி, "நீர் யூதனா யிருக்க, சமாரிய ஸ்திரீயாகிய என்னிடத்தில், தாகத்துக்குத் தா என்று எப்படிக் கேட்கலாம்" என்றாள் (வ. 8ஆ-9ஆ).

இந்த உரையாடலைப் புரிந்துகொள்ள, நாம் யூதர்கள்

மற்றும் சமாரியர்களிடையே இருந்த உறவின் தன்மையைப் பற்றிச் சிறிது அறிய வேண்டியது அவசியம். நாம் அனைவருமே இனப்பிரச்சனைகளைக் கண்டுள்ளோம்-எவ்வித இனப்பாகுபாடும் தேவனுடைய இருதயத்தைப் பிளப்பதாயிருக்கிறது- ஆனாலும் நம்மில் ஒருவரும் யூதர்கள்-சமாரியர்கள் இடையே நிலவிய வெறுப்புடன் ஒப்பிடக்கூடிய எதையும் கண்டதில்லை.[6] அநேக ஆண்டுகளாய் இந்த வெறுப்புணர்வு தொடர்ந்து இருந்துள்ளது. கி.மு. 727 - ல்[7] அசீரியர்கள் வடக்கிலிருந்த பத்து கோத்திரங்களில் பெரும்பாலான ஜனங்களை சிறைப் பிடித்துச் சென்றனர்; இதன் விளைவாக சமாரியர்கள் கலப்பின மக்களாயினர். வடபகுதியில் எஞ்சியிருந்த யூதர்கள், வடக்கு பலஸ்தீனத்திற்கு அசீரியர்கள் அனுப்பிவைத்த புறஜாதியாரோடு[8] திருமண உறவு கொண்டனர். இந்த கலப்புத் திருமணங்களின் விளைவாக பிறந்தவர்கள்தான் சமாரியர்கள் ஆவர். யூதர்களுக்கு தாங்கள் இனத்தூய்மையை அழிப்பதென்பது "மன்னிக்க முடியாத பாவம்" ஆகும். இன்றைய நாள்வரைக்கும், மிகக் கண்டிப்பான யூதக் குடும்பத்தில், பிள்ளைகளில் ஒருவன் யூத நம்பிக்கைக்கு அப்பாற்பட்ட ஒருத்தியை திருமணம் செய்தால், அக்குடும்பம் அவனுக்கு மரண அடக்கச் சடங்கு நிறைவேற்றும்; அவர்களைப் பொறுத்த அளவில், அவன் மரித்தவன் ஆவான்.

இயேசு இந்தப் பெண்ணொடு பேசுவதில், குறைந்த பட்சம் மூன்று வியப்பான உண்மைகள் காணப்படுகின்றன. (1) முன்பு குறிப்பிட்டபடி, இயேசு தாகத்துக்கு தா என்று கேட்டது, ஒரு சமாரியப் பெண்ணிடம். (2) இவள் ஒரு பெண், யூத ஆண்கள் பொதுவிடத்தில் பெண்களிடம் எத்தொடர்பும் கொள்ள மாட்டார்கள் (வ. 27 ஐக் கவனிக்கவும்). ஒரு யூத ரபீ பொது இடத்தில் தன் மனைவி அல்லது மகளுடன்கூடப் பேசமாட்டார்கள். பரிசேயருக்குள்,"காயப்பட்டு இரத்தம் சிந்தும்" குழு ஒன்று உண்டு. அவர்கள் பெண்களைப் பார்த்தால் கண்களை மூடிக்கொண்டு நடந்து எதிரில் உள்ள சுவர்கள், மரங்களின் மீது மோதிக் கொள்வதால் இந்தப் பெயரால் அழைக்கப் பட்டனர். (3) நாம் இனி பார்க்கப்போவதுபோல், இவள் பெண் மாத்திரமல்ல; அவளுடைய ஒழுக்கம் கேள்விக்குரியதாயிருந்தது.

யோவான் மூன்று மற்றும் நான்காம் அதிகாரங்களில்

இயேசு எதிர்கொள்ளும் தனிநபர்கள் இருவருக்கிடையே மிகத் தெளிவான முரண்பாடு காணப்படுகிறது. யோவான் 3ல் சந்தித்த நிக்கொதேமு (1) ஒரு யூதர், (2) ஒரு ஆண், (3) உயர்ந்த ஒழுக்கமும், நேர்மையுள்ள தனி நபர். யோவான் 4ல் அவர் கிணற்றண்டையில் சந்தித்த ஸ்திரீ (1) ஒரு சமாரியப் பெண் (2) ஒரு பெண் (3) ஒழுக்கவீனமுள்ளவள். இருவருக்கு இரட்சிப்புத் தேவையாயிருந்தது. நிக்கொதேமுவிடம் காண்பித்த அதே அளவு இரக்கம், மென்மை மற்றும் மரியாதையை அந்தப் பெண்ணிடமும் இயேசு காண்பித்தது ஏன்? ஏனென்றால் ஒவ்வொருவரும் முக்கியமானவர்களே.

நீங்கள் பக்தியுள்ளவர்களோ, அல்லது பக்தியற்றவர்களோ, ஆணோ அல்லது பெண்ணோ, உயர்ந்த ஒழுக்கமுள்ள வாழ்க்கை வாழ்பவரோ அல்லது வாழ்க்கையில் பிரச்சனைகள் உள்ளவரோ அல்லது "முக்கியமற்றவர்" எனக் கருதப்படுபவரோ- தேவன் உங்களை நேசிக்கிறார். நீங்கள் தேவசாயலாகப் படைக்கப்பட்டீர்கள் (ஆதி. 1:26). நீங்கள் தேவனுக்கு விசேஷித்த நபர். இயேசு உங்களுக்காகச் சிலுவையில் மரித்தார்- அவர் உங்களுக்குத் தேவையாயிருந்திருப்பதாலேயே மரித்திருக்கிறார்.

கிணற்றண்டையில் இயேசு இப்பெண்ணோடு நடத்திய உரையாடலின் இடையில் யோவான் சில விளக்க வார்த்தைகளை நுழைத்துள்ளார்: "(யூதர்கள் சமாரியருடனே சம்பந்தங்கலவாதவர்களானபடியால்)" (வ. 9அ). சமாரியர்களோடு யூதர்கள் சற்றும் தொடர்பு கொள்ளவில்லை என்று இதற்குப் பொருள்படாது. அவர்களுக்குள் பொருளாதார ஈடுபாடு இருந்தது. (அப்பொழுதுதான் சமாரிய பட்டணத்தில் உணவு கொள்ளும்படி சீஷர்கள் சென்றிருந்தனர்). சாதாரணமாக சமூக விஷயங்களில் யூதர்கள், சமாரியருடன் ஈடுபாடு கொள்வதில்லை, என்றே யோவான் வலியுறுத்துகிறார். புதிய ஆங்கில வேதாகமத்தில் (NEB) "யூதர்கள் மற்றும் சமாரியர்கள் பாத்திரங்களை பொதுவாய் வைத்துப் பயன்படுத்துவதில்லை" என்று ஒரு மாற்று மொழிபெயர்ப்பு தரப்பட்டுள்ளது. யூதர்கள் சமாரியர்களைத் தீட்டுள்ளவர்கள் என்று கருதுவதால், சமாரியர்களின் பாத்திரங்களில் அவர்கள் புசிப்பதோ, குடிப்பதோ கிடையாது. இருப்பினும் தாகத்துக்குத் தா என்று இயேசு

அவளிடம் கேட்டபோது, அவளுடைய பாத்திரத்திலிருந்து குடிக்க அவர் தயாராயிருந்தார். இயேசு தமது ஜனங்களின் பழக் கத்திற்கு மாறான ஒன்றை செய்யத் தயாராயிருந்தது ஏன்? ஏனென்றால் அவருக்கு, இந்தப் பெண் விசேஷித்தவளாய் இருந்தாள். ஏனென்றால், ஒவ்வொருவரும் கர்த்தருக்கு, முக்கியமானவர்களே.

## திகைப்பூட்டும் ஒரு விளக்கம் (யோவா. 4:10-15)

"இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக, 'நீ தேவனுடைய ஈவையும் (யோவான் 3:16 ன்படி இயேசுவே, இவ்வுலகத்திற்குத் தேவனின் ஈவாக உள்ளார்), ''தாகத்துக்குத் தா'' என்று உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார் என்பதையும் அறிந் திருந்தாயானால், நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய், அவர் உனக்கு ஜீவத் தண்ணீரைக் கொடுத்திருப்பார்' என்றார் (வ. 10). கிணற்று நீரைக் காட்டிலும் ஓடும் நீரூற்றின் தண்ணீரை யூதர்கள் 'ஜீவ தண்ணீர்' என்று நினைத்தனர். மிக முக்கியமானது என்ன வென்றால், தனி நபரின் ஆவிக்குரிய தாகத்தைத் தணிக்கக் கூடிய[9] தேவ பிரசன்னம் மற்றும் வல்லமையை தீர்க்கதரிசிகள் "ஜீவ தண்ணீர்" என்று அழைத்தனர். இவ்விதமாய், இயேசு ஆவிக்குரிய வல்லமையையும், ஆவிக்குரிய வாழ்க்கையின் பலத் தையும் குறிப்பிட்டார்.

அடிக்கடி நடந்தது போலவே, இயேசுவின் ''மாணவி'' இதைப் புரிந்து கொள்ளவில்லை.

> அதற்கு அந்த ஸ்திரீ; ''ஆண்டவரே, மொண்டு கொள்ள உம்மிடத்தில் பாத்திரமில்லையே (அந்தக் காலத்தில் அக்கிணறு 100 முதல் 150 அடி ஆழம் இருந்தது[10]); கிணறும் ஆழமாயிருக்கிறதே, பின்னே எங்கேயிருந்து உமக்கு ஜீவ தண்ணீர் உண்டாகும். இந்தக் கிணற்றை எங்களுக்குத் தந்த நம்முடைய பிதாவாகிய யாக்கோபைப் பார்க்கிலும் நீர் பெரியவரோ?அவரும் அவர் பிள்ளைகளும், அவர் மிருக ஜீவன்களும் இதிலே குடித்ததுண்டே" என்றாள் (வ. 11-12).

இது, இயேசு மற்றும் அவரது போதனையைக் கேட்பவர் களிடையே நிலவும் பொதுவான சூழ்நிலையாகும். இயேசு திகைப்பூட்டும் ஒரு விளக்கத்தை, புரியாத வண்ணம் கொடுப் பார். அதைக் கேட்பவர்கள் புரிந்து கொள்ளாமல், அவர் பேசும்

*வார்த்தையை அப்படியே எடுத்துக்கொள்வார்கள். பின்பு இயேசு அவர்களை ஆவிக்குரிய புரிந்து கொள்ளுதலில் வழி நடத்துவார். இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: "இந்தத் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகமுண்டாகும்" என்றார் (வ. 13). வாழ்க்கையின் ஒவ்வொரு விஷயத்தைப் பொறுத்த மட்டிலும் இது உண்மையாகும். நாம் குடிக்கிறோம், மறுபடியும் தாகம் உண்டாகிறது. நாம் புசிக்கிறோம்; மறுபடியும் பசியுண்டாகிறது. நாம் சந்தோஷமாயிருக்கிறோம்; அவை மறைகின்றன; மறுபடியும் சந்தோஷத்தைத் தேடுகிறோம். வெற்றி, புகழ் அல்லது சந்தோஷம் போன்ற வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சங்களும் விரைவில் மறைகின்றன.*

*இயேசு தொடர்ந்து கூறினார்: ''நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவ காலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும்'' (வ. 14). கிறிஸ்தவ வழியில் காணக்கூடிய பலம், சந்தோஷம் மற்றும் வல்லமையைப் பற்றி இயேசு பேசினார். ''மேசியாவின் மூலமாய் வரும் என்று தீர்க்கதரிசிகள் சொன்ன எல்லாவற்றையும் கொண்டு வந்துள்ளேன், நீங்கள் ஒரு அளவற்ற ஆனந்தமுள்ள வாழ்க்கையைப் பெற முடியும்" என்று இயேசு கூறினார்.*

*இது அந்த பெண்ணுக்கு நல்லதென்று பட்டது; ஆனால் இன்னும் அவள் இயேசு பேசுவதை தெளிவாய் புரிந்து கொள்ளவில்லை. அந்த ஸ்திரீ அவரை நோக்கி: "ஆண்டவரே, எனக்குத் தாகமுண்டாகாமலும், நான் இங்கே மொண்டு கொள்ள வராமலுமிருக்கும்படி அந்தத் தண்ணீரை எனக்குத் தரவேண்டும்" என்றாள் (வ. 15). உண்மையாக அவள், "இது மிகப் பெரிய விஷயம்! கடும் வெயிலில் இனி அரை மைல் தூரம் நடந்து வந்து தண்ணீர் எடுக்கத் தேவையில்லை! இந்தக் குடத்தைச் சுமந்து நான் களைத்துப் போனேன்" என்றாள்.*

## தெளிவான ஒரு கேள்வி
## *(யோவா. 4:16-18)*

*இப்பொழுது அந்தப் பெண் இயேசு கூறுவதைக் கவனிக்கத் தொடங்கினதால், அவளுடைய இருதயத்தைச் சீர்படுத்த அவர்*

தயாரானார். இயேசு பயப்படுகிறவரல்ல; அவர் அவளை நோக்கி: "நீ போய் உன் புருஷனை இங்கே அழைத்துக் கொண்டு வா" என்றார் (வ. 16). நாம் இயேசுவண்டையில் வரும் முன், சற்று நின்று நிதானித்து, நம்மையே ஒரு முறை நேர்மையாக, நாணயமாகப் பரிசீலனை செய்வது அவசியமாகும் ... தேவனுடைய வார்த்தையாகிய கண்ணாடியில் நாம் எப்படித் தெரிகிறோம் என்று பார்க்க வேண்டும். இதைச் செய்யும்படி இயேசு அப்பெண்ணை வலியுறுத்தினார்.

அதற்கு அந்த ஸ்திரீ; "எனக்குப் புருஷன் இல்லை" என்றாள் (வ. 17அ). உரையாடலின் இந்தப் பகுதிவரைக்கும் அப்பெண் சரளமாகவே பேசினாள். அவள் அழகாக, ஆனால் மதிப்புத் தராத தொனியில் பேசிக் கொண்டிருந்தாள். ஆனால் இந்த சமயத்தில் அவள் பேசியது சுருக்கமாயிருந்தது - ஆங்கிலத்தில் நான்கு வார்த்தைகள் இதுவே தமிழில் மூன்று வார்த்தைகள் கொண்ட (கிரேக்க மொழியிலும் மூன்றே வார்த்தைகள்) ஒரு வாக்கியத்தைச் சுருக்கமாய் சொன்னாள். அவளது அமைதியின் மையை நாம் நன்றாகவே உணர முடிகிறது.

இயேசு அவளை நோக்கி: "எனக்குப் புருஷன் இல்லை என்று நீ சொன்னது சரிதான். எப்படியெனில், ஐந்து புருஷர் உனக்கிருந்தார்கள், இப்பொழுது உனக்கிருக்கிறவன் புருஷனல்ல, இதை உள்ளபடி சொன்னாய்" என்றார் (வ. 17ஆ-18).

இயேசுவிடம் நேருக்கு நேராய் வருவதென்பது துவக்கத்தில் நம்மை அயரவைக்கும் ஒரு அனுபவமாக இருக்கக்கூடும். இச்சம்பம் நடந்த உடனே இயேசு கலிலேயா சென்று மறுபடியும் கப்பர்நகூமுக்குத் திரும்பினார். பேதுரு மறுபடி மீன் பிடிக்கச் சென்றார். லூக்கா 5ல் திரளான மீன்களைப் பிடித்த அற்புதம் நடந்தது நமக்கு இருக்கிறது. பேதுரு ஏற்கனவே இயேசுவோடு கூட அதிக தூரம் பிரயாணம் செய்திருந்தார். இருப்பினும் இயேசுவின் மகிமை மற்றும் வல்லமையைத் தனது வாழ்க்கையில் அப்போது தான் முதன் முதலாக உணர்ந்த பேதுரு, "ஆண்டவரே நான் பாவியான மனுஷன். நீர் என்னை விட்டுப் போக வேண்டும்" என்றான் (லூக். 5:8).

சுவிசேஷ செய்தியில், குற்ற உணர்வுக்கு இடமில்லை என்று சிலர் கூறுகிறார்கள். ஆனால் சுவிசேஷம் குற்ற உணர்வை உணர்த்துகிறது. நமது வாழ்க்கை முழுவதும் நாம் பாவ

உணர்வோடு இருக்க வேண்டும் என்று தேவன் விரும்பவில்லை. ஆனால் நமது ஆவிக்குரிய தேவைகளைப் புரிந்து கொள்ளும் போது மாத்திரமே, தேவனுடைய இரக்கங்கள், கிருபை வரங்களை நாம் உணரத் தொடங்க முடியும்.

இந்தப் பெண் யார் என்றும், எப்படிப்பட்டவளென்றும் இயேசு முழுமையாக அறிந்திருந்தார், என்பதைக் கவனியுங்கள். இதற்குப் பின்பு இயேசு பாவியாகிய ஒரு ஸ்திரீ தனது கால்களில் தைலம் ஊற்றி அபிஷேகம் செய்ய அனுமதித்த போது அவருடைய எதிரிகள், அவர் அந்த ஸ்திரீ எப்படிப் பட்டவள் என்று அறியாதிருந்ததாக நினைத்தனர்.[11] அந்த ஸ்திரீ எப்படிப்பட்டவள் என்று இயேசு நன்றாகவே அறிந்திருந்தார். அதேபோல இந்த சமாரியப் பெண்ணும் எப்படிப்பட்டவள், என்றும் அவர் அறிந்திருந்தார். இருப்பினும் அவரைப் பொறுத்த மட்டில் அவள் இன்னும் விசேஷித்தவளாய் இருந்தாள். இயேசு நமது கெட்ட குணங்கள், பிரச்சனைகள், மற்றும் போராட்டங்களை மட்டும் பார்த்துக் கொண்டிருப்பதில்லை. அவர் நமது நற்குணங்கள், நம்மால் சாத்தியமாகக் கூடியவைகள், தேவனுடைய உதவியோடு நாம் பெறக்கூடிய நிலை ஆகியவற்றையும் பார்க்கிறார். இந்த சம்பவத்தில், விசுவாசத்தின் பாதைக்கு ஒரு முழுப்பட்டணத்து ஜனங்களையும் நடத்தத் தொடங்கக்கூடிய ஒரு பெண்ணை அவர் பார்த்தார். இயேசுவுக்கு, ஒவ்வொரு வரும் முக்கியமானவர்களே!

## சிறப்பான ஒரு விவாதம் (யோவா. 4:19-26)

இந்தப் பெண்ணின் ஆவிக்குரிய தேவைகளை இயேசு வெளிப்படையாக்கின போது, அவள் பதில் செயல் எவ்விதத்தில் இருந்தது? ஏறக்குறைய அவள் வேறு விஷயத்தைப் பேசுவதற்கு முற்பட்டாள் (வ. 19).[12] (வேதத்தின் வழியே ஆவிக்குரிய தேவையைக் கற்றுத்தரும் வேளையில் விஷயத்தை மாற்றும் நபர்களுடன் எப்போதாவது நீங்கள் வேதத்தைக் கற்றதுண்டா?)

அந்த ஸ்திரீ அவரை நோக்கி: "ஆண்டவரே, நீர் தீர்க்கதரிசி என்று காண்கிறேன்" என்றாள் (வ. 19). ஆதியாகமம் முதல்

உபாகமம் வரையுள்ள ஐந்து புத்தகங்களை மட்டுமே சமாரியர்கள் பயன்படுத்தினர். இவைகளில் தீர்க்கதரிசிகளைப் பற்றி கொஞ்சம் மட்டுமே சொல்லப்பட்டுள்ளது, இருப்பினும் சமாரியர்கள் தாங்கள் ஏற்றுக் கொள்ள விரும்பாவிட்டாலும், அநேக விஷயங்களை யூதர் மூலம் கற்றிருந்தனர். தீர்க்கதரிசிகளைப் பற்றி இந்தப்பெண் அறிந்திருந்தாள்; இயேசு அவர்களில் ஒருவரா யிருக்க வேண்டும் என்று இவள் நினைத்தாள்.

எனவே அவள், "தீர்க்கதரிசியே! உம்மிடத்தில் நான் ஒரு கேள்வி கேட்க வேண்டும்" என்று சொல்லி, "எங்கள் பிதாக்கள் இந்த மலையிலே தொழுதுகொண்டுவந்தார்கள்'' (வ. 20அ) என்றாள். சமாரியர்களுக்கு நெகேமியா உதவ மறுத்த பிறகு,[13] அவர்கள் கெரீசிம் மலையின்மேல் தங்கள் சொந்த ஆலயத்தைக் கட்டிக் கொண்டனர். கெரீசிம் மலையைப் பற்றி அவர்கள் வினோதமான முறையில் பெருமை பாராட்டினார்கள்: ஆபிரகாம், ஈசாக்கைப் பலியிட வந்ததும்; மெல்கிசேதேக் ஆபிரகாமை எதிர்கொண்டதும்; வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள்[14] இஸ்ரவேலர்கள் வந்தவுடன் தேவனுக்கென்று பலிபீடம் முதன் முதலாகக் கட்டப்பட்டதும் இந்த மலையின் மீது தான் என்று அவர்கள் கூறினர். சீகார் ஊரின் மிக அருகாமையில் அமைந்த இம்மலை அவர்களுக்கு மிகவும் பரிசுத்தமான இடமாயிருந்தது, அந்தப் பெண் ஒரு வேளை தன் கையை நீட்டி அந்த மலையைச் சுட்டிக்காட்டியிருக்கக்கூடும். "நீங்கள் (யூதர்களாகிய நீங்கள்) எருசலேமிலிருக்கிற ஸ்தலத்திலே தொழுதுகொள்ளவேண்டும் என்கிறீர்களே" என்றாள் (வ. 20ஆ). அவள் கேட்க விரும்பிய கேள்வி ''இதில் எது சரியானது?'' என்பதே.

விரைவிலேயே இரண்டும் சரியற்றதாகும் என்பதே இயேசுவின் பதிலாயிருந்தது: "ஸ்திரீயே, நான் சொல்லுகிறதை நம்பு, நீங்கள் இந்த மலையிலும், எருசலேமிலும் மாத்திரமல்ல, எங்கும் பிதாவைத் தொழுதுகொள்ளும் காலம் வருகிறது" (வ. 21). வரக் கூடியதாய் இருந்த மேசியாவின் இராஜ்யத்தில் இடம் அல்ல மாறாக நபர் முக்கியமானவர். (ஆயிரம் வருட அரசாட்சியை நம்புகிறவர்கள், எருசலேம், தொழுது கொள்ளும் மையப்பகுதியாக மறுபடியும் மீட்டுக் கொள்ளப்படும் என்கிறார்கள். சத்தியத்திற்கு அப்பாற்பட்டது வேறொன்றுமில்லை என்பதை இயேசுவின் வார்த்தைகள் நமக்கு

அறிவிக்கின்றன).

மேலும் அவர் தொடர்ந்து கூறினார்: "நீங்கள் அறியாததைத் தொழுதுகொள்ளுகிறீர்கள்; நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுதுகொள்ளுகிறோம்; ஏனென்றால் இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது" (வ. 22). யூதேயா தேசத்திலிருந்து மேசியா வந்ததால், அவர் "இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது" என்றார். மேலும் சுவிசேஷத்தை அறிவித்த முதல் பிரசங்கியார்களான பேதுரு, பவுல் போன்றவர்களும் யூதர்களே. பின்னாளில், முதன் முதல் கிறிஸ்தவர்களானவர்களும் யூதர்களே.

இயேசு இந்தப் பெண்ணை நேசித்து, அவள் மேல் அக்கறையாயிருந்தபோதிலும், அவள் ஒழுக்கம் மற்றும் உபதேசிக்கப்படுதலில் தவறாயிருந்ததைச் சுட்டிக் காட்டத் தயங்கவில்லை. ஒருவரை ஏற்றுக் கொள்ளுவதென்றால், அவரது வாழ்க்கையில் உள்ள தவறையும் ஏற்றுக்கொள்வதென்று பொருள்படாது. ஒரு நண்பர் தமது ஒழுக்கம் மற்றும் உபதேச முறை இவற்றில் தவறு செய்தால் அதைக்குறித்து நாம் ஒன்றும் சொல்லாதிருப்பதற்குப் பெயர் அன்பு அல்ல; மாறாக அது அன்புக் குறைவேயாகும்.

அடுத்தபடியாக, இயேசு, ''உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும்; அது இப்பொழுதே வந்திருக்கிறது; (இராஜ்யம்/சபை சில மாதங்களில் ஸ்தாபிக்கப்படவிருந்தது) தம்மைத் தொழுது கொள்ளுகிறவர்கள், இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்.'' என்று கூறினார் (வ. 24). "எங்கே" ஆராதிக்கிறோம் என்பதல்ல, மாறாக "யாரை", "எவ்விதம்" ஆராதிக்கிறோம் என்பதே முக்கியம். யாரை? "பிதாவை", எவ்விதம்? "ஆவியில்" தேவன் விரும்பும்படி நமது இருதயத்திலிருந்து, "உண்மையோடும்" தேவனுடைய அறிவுரையின்படி. யோவான் 17ல், இயேசுவின் மாபெரும் ஜெபத்தில் அவர், ''உம்முடைய வசனமே சத்தியம்'' (யோவான் 17:17) என்றார்.

உண்மையான ஆராதனையின் இந்த மாபெரும் விளக்கத்திற்குப்பின், ''தேவன் ஆவியாயிருக்கிறார்; அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும்'' என தொடர்ந்து கூறினார் (வ.

*24). இவ் வசனத்திலிருந்து ஆராதனைபற்றி நாம் அதிகமாய்க் கற்றுக் கொள்ள முடியும்; இருப்பினும், இந்தப் பாடத்தில் இயேசு மற்றும் அவரோடு இருந்தவர்களிடையே இருந்த தொடர்பு நமது அடிப்படைப் பாடமாக இருப்பதால் அதையே நாம் கவனிப்போம்.*

*அந்தப் பெண் அவரிடம், ''கிறிஸ்து என்னப்படுகிற மேசியா[15] வருகிறார் என்று அறிவேன், அவர் வரும்போது எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார்'' என்றாள் (வ. 25). மேசியா பற்றிய கருத்தும், சமாரியர்கள் யூதர்களிடம் பெற்ற மற்றோரு இரவல்தான். அந்தப் பெண்ணின் விசுவாசம் எவ்விதமாய் வளர்ச்சியுற்றது என்று கவனியுங்கள். அவள் முதலில் இயேசுவை "யூதன்" (வ. 9) என்றும், பிறகு "ஆண்டவர்" (வ. 11) என்றும், பிறகு, "தீர்க்கதரிசி" என்றும் (வ. 19) குறிப்பிட்டாள். இதன் பிறகு, இயேசு பேசியபோது, ''மேசியா''வைப்பற்றி அவளுக்கு நினைப்பூட்டினார் (வ. 25, 29).*

*இயேசு அவளிடம் "உன்னுடன் பேசுகிற நானே அவர்" என்றார் (வ. 26).[16] மூல பாஷையில் இது, "உன்னுடன் பேசுகிற நானே அவராயிருக்கிறேன்"[17] என்றுள்ளது. இயேசு, "நீங்கள் மேசியாவைத் தேடுகிறீர்களா? நானே அவர்! நீங்கள் தீர்வுகளைத் தேடுகிறீர்களா? நானே அவர்? நீங்கள் நம்பிக்கை, உதவி மற்றும் உங்கள் உள்ளான தாகத்தைத் தணிக்க விரும்புகிறீர்களா? நானே அவர்!" என்று கூறினார்.*

## ஊக்குவிக்கும் ஒரு இடைக்காட்சி (யோவா. 4:27-38)

*சீஷர்கள் உணவுடன் திரும்பினார்கள்.[18] "அத்தருணத்திலே அவருடைய சீஷர்கள் வந்து, அவர் ஸ்திரீயுடனே பேசுகிறதைப் பற்றி ஆச்சரியப்பட்டார்கள். ஆகிலும் என்ன தேடுகிறீரென்றாவது, ஏன் அவளுடன் பேசுகிறீரென்றாவது, ஒருவனும் கேட்கவில்லை" (வ. 27).*

*"அப்பொழுது அந்த ஸ்திரீ, தன் குடத்தை வைத்துவிட்டு," (வ. 28அ). அவள் தனது குடத்தை வைத்துவிட்டது என்பது அவளுடைய ஆச்சரியத்தையும், அவள் சென்று மறுபடி திரும்பி வரத்திட்டமிட்டதையும் சுட்டிக் காண்பிக்கின்றது.*

> ... ஊருக்குள்ளே போய், ஜனங்களை நோக்கி: "நான் செய்த எல்லாவற்றையும் ஒரு மனுஷன் எனக்குச் சொன்னார்; அவரை வந்து பாருங்கள்; அவர் கிறிஸ்துதானோ'' என்றாள். அப்பொழுது அவர்கள் ஊரிலிருந்து புறப்பட்டு அவரிடத்தில் வந்தார்கள் (வ. 28ஆ-30).

சமாரியர்கள் கிணற்றண்டையில் வந்து கொண்டிருக் கையில், இயேசு தமது சீஷர்களுக்குப் போதித்துக் கொண்டி ருந்தார்.

> இப்படி நடக்கையில் சீஷர்கள் அவரை நோக்கி; ''ரபீ, போஜனம் பண்ணும்'' என்று வேண்டிக்கொண்டார்கள். அதற்கு அவர்; ''நான் புசிப்பதற்கு, நீங்கள் அறியாத ஒரு போஜனம் எனக்கு உண்டு" என்றார். அப்பொழுது சீஷர்கள் ஒருவரையொருவர் பார்த்து: "யாராவது அவருக்கு போஜனம் கொண்டு வந்திருப்பானோ" என்றார்கள் (வ. 31-33).

நிக்கொதேமுவுக்கும், அந்தப் பெண்ணுக்கும் போதித்தது போலவே, இந்த சீஷர்களுக்கும் இயேசு போதித்தார். முதலில் அவர் மறைவான மொழியில் அதைக் கூறியபோது, அவர்கள் அதைத் தவறாகப் புரிந்துகொண்டதால், அவர் அவர்களை, ஆவிக்குரிய புரிந்துகொள்ளுதலில் வழி நடத்தினார். இயேசு அவர்களை நோக்கி: "நான் அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது'' (எனது ஆவிக்குரிய போஜனமாயிருக் கிறது)" என்றார் (வ. 34). இயேசுவைப் பின்பற்றினவர்கள், தங்கள் போதகரின் வார்த்தைகளைப் புரிந்து கொள்வதில் மிகவும் சிரமப்பட்டனர். அவர்கள் அறிவுக் குறைபாடு இருந்த நிலையிலும், இயேசு அவர்களைக்குறித்து அக்கறையாயிருந் தார். அவர் விளக்கமளிக்கையில் மிகுந்த பொறுமையைக் கையாண்டார். ஏனெனில் ஒவ்வொருவரும் முக்கியமானவர் களே.

இதன்பிறகு இயேசு உணவு என்ற கருத்திலிருந்து அதன் மூலமாகிய அறுவடை என்ற கருத்துக்கு மாறுகிறார். அறுவடைக்குக் காத்திருத்தல் பற்றிய ஒரு யூதப் பழமொழியை இவ்விடத்தில் அவர் சுட்டிக் காட்டுகிறார்: "அறுப்புக்காலம் வருகிறதற்கு இன்னும் நாலு மாதம் செல்லும் என்று நீங்கள்

சொல்லுகிறதில்லையா? இதோ, வயல் நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதுதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லு கிறேன்'' (வ. 35). வேறு வார்த்தைகளில் சொல்வதானால், "நீங்கள் விதைக்கின்றபோதே, நான்கு மாதம் கழித்து அறுவடை யாகும் என்பதை அறிவீர்கள். சமாரியாவில் இப்போதுள்ள சூழ்நிலையும் அதே போன்றது என்பதை நீங்கள் உணரலாம், ஆனால் சிலகாலம் முன்பு[19] விதை இங்கு விதைக்கப்பட்டது, இப்போது அறுப்புக் காலமாயிற்று" எனலாம். இயேசு, "இதோ வயல்நிலங்கள் இப்போதே அறுப்புக்கு விளைந்திருக்கிறது'' என்றபோது, ஒருவேளை, வெள்ளை ஆடை அணிந்து தம்மை நோக்கி வந்து கொண்டிருந்த சமாரியர்களைச் சுட்டிக் காண்பித் திருக்கலாம்.[20]

## திருப்தியளிக்கும் ஒரு அறுவடை (யோவான் 4:39-42)

அறுவடை[21] பற்றிய தமது உரையாடலை இயேசு முடித்த சமயம், சமாரியர்கள் அவ்விடம் வந்து சேர்ந்தனர்.

> "நான் செய்த எல்லாவற்றையும் எனக்குச் சொன்னார்'' என்று சாட்சி சொன்ன அந்த ஸ்திரீயினுடைய வார்த்தையி னிமித்தம் அந்த ஊரிலுள்ள சமாரியரில் அநேகர் அவர் மேல் விசுவாசமுள்ளவர்களானார்கள். சமாரியர் அவரிடத்தில் வந்து, தங்களிடத்தில் தங்கவேண்டுமென்று அவரை வேண்டிக் கொண்டார்கள்; அவர் இரண்டு நாள் அங்கே தங்கினார் (வ. 39-40).

கலிலேயாவுக்குச் செல்ல எந்த கட்டாயமான நோக்கும் இயேசுவுக்கு இருந்திருந்தாலும், அந்தக் கலப்பின மக்களோடு அவர் இரண்டு நாட்களைச் செலவழித்தார். ஏனென்றால், ஒவ்வொருவரும் முக்கியமானவர்களே.

''அப்பொழுது அவருடைய உபதேசத்தினிமித்தம் இன்னும் அநேகம் பேர் விசுவாசித்து'' (வ. 41). இயேசுவை அவர்கள் நேரடியாய்க் கண்டபோது, அவர் சொன்னதை அவர்களே கேட்டபோது, அவரது நடக்கை, அவர் எல்லா மனு ஷரையும் நேசித்த விதம் ஆகியவற்றை உணர்ந்தபோது அவரை

அவர்கள் விசுவாசித்து ஏற்றுக்கொண்டனர்.

புறக்கணிக்கப்பட்ட இந்த ஜனங்களை, "வயல் நிலங்கள் அறுப்புக்கு விளைந்திருக்கிறது" என்று கூறுவதில், இயேசுவின் தன்னம்பிக்கை தவறானதாகியதா? நமது பாடப்பகுதியின் கடைசி வசனத்தைக் கவனியுங்கள்; அந்த ஸ்திரீயை நோக்கி: "உன் சொல்லினிமித்தம் அல்ல, அவருடைய உபதேசத்தை நாங்களே கேட்டு, அவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலக இரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோம்" என்றார்கள் (வ. 42). "அவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலக இரட்சகர்" என்பது எவ்வளவு ஆச்சரியமான வார்த்தைகள்! இயேசுவுடன் நெருங்கியிருந்த அவரது அப்போஸ்தலர்கள், அவர் யூதர்களின் இரட்சகர் என்று நினைத்தார்கள். பேதுருவுக்கு[22] ஒரு விசேஷித்த தரிசனத்தை தேவன் அருளும்வரையில் அவர்கள் புரியாமலேயே இருந்தனர். ஆனால் இந்த சமாரியர்கள் இயேசுவை உலக இரட்சகராகவே கண்டனர்!

## முடிவுரை

நீங்கள் இந்த "உலகத்தில்" இருந்தால், இந்த பூமியில் நீங்கள் உலாவிக் கொண்டு இருந்தால், இயேசு உங்கள் இரட்சக ராயிருக்கிறார். அவருக்கு நீங்கள் விசேஷித்தவராயிருக்கிறீர்கள். அவர் உங்களை நேசிக்கிறார். உங்கள் மீது அக்கறையாயிருக் கிறார், உங்களுக்காக அவர் நேரத்தை எடுத்துக் கொள்கிறார், அவர் உங்களுக்காக மரித்தார், உங்களை என்றும் கைவிட மாட்டார். ஏன்? ஏனென்றால் நீங்கள் முக்கியமானவர்களே.

---

**குறிப்புகள்.**

[1]மறையுங்கள் அல்லது தேடுங்கள் (ஓல்டு டேப்பன் N.J. ப்ளமிங் H. ரெவல் கோ 1979), 58ல் ஜேம்ஸ் டோப்ஸனால் சுட்டிக்காட்டப்பட்டது. [2]ஒரு இடத்திலிருந்து மற்றோரு இடத்திற்குப் போகும்போது சுற்றி வளைத்துப் போகுதல். இடத்திற்குத் தக்காற்போல் இவ்விளக்கத்தை மாற்றி உபயோகிக்கலாம். [3]மத்தேயு 4:12. [4]யோவான் இவ்விடத்தில் ரோமானியரின் நாள் கணிப்பைக் கூறுவதாய் சிலர் நினைக்கின்றனர். ஆனால் பலர், யூதருடைய நாள் கணிப்பை அவர் கூறுவதாய் நினைக்கின்றனர். [5]உங்கள் பகுதியில் உள்ள பெரிய உணவுச்சாலையின் பெயரை இங்கு குறிப்பிடலாம். [6]அநேகர் இவ்வகையான வெறுப்புணர்வைக் கண்டிருக்கக் கூடும். கேட்பவர்கள் உணர்ந்துள்ள ஒரு வெறுப்புணர்வைப் பற்றிக் கூறினால்,

*யூதர்-சமாரியர் வெறுப்புணர்வை அவர்கள் அறியக்கூடும். [7]2 இராஜா. 17:6. [8]2 இராஜா. 17:24. [9]சங். 36:9; ஏசாயா 35:7; எபிரேமியா 17:13 போன்ற வசனங்களைக் கவனிக்கவும். [10]அந்த நாளில் இருந்த, இக்கிணற்றினுள் ஜனங்கள் கற்களை எறிந்து வந்ததினால், இன்று அக்கிணறு ஐம்பது, அறுபதடி ஆழமேயுள்ளது. இப்போது அதன் மேல் ஒரு மூடி போடப்பட்டுள்ளது.*

*[11]லூக்கா 7:39 (இணை வசனம்). [12]ஒரு வேளை அவள் கருத்தை மாற்றாமலிருந்திருக்கலாம். ஒரு வேளை தனது பாவங்களுக்கு பலி செலுத்துவது எங்கே என்று அவள் கேட்டிருக்கலாம் (வ. 20). [13]இணை வசனம் நெகேமியா 4:1-3; 6:1-4. [14]கெரீசிம் மலையை மகிமைப்படுத்த, அவர்கள் வேதவசனம், சரித்திரம் ஆகிய வற்றை தவறாகப் பயன்படுத்தினார்கள். [15]"மேசியா" என்ற எபிரெய வார்த்தை, "அபிஷேகம் பண்ணப்பட்டவர்" என்ற பொருள்தரும். "கிறிஸ்து" என்ற கிரேக்க வார்த்தையும் இதே பொருள் கொண்டதாகும். [16]இயேசுவின் எதிரிகள் அச்சமயத்தில் அவரைச் சுற்றியிருக்கவில்லை. எனவே அவர் தன்னைப் பற்றி வழக்கத்தை விட அதிக தைரியமாகவே வெளிப்படுத்தினார். [17]"நான் அவராக இருக்கிறேன்" என்பது தேவத்துவத்தின் வெளிப்பாடு ஆகும் (யாத். 3:14); இயேசு, தேவனுடைய குமாரன் என்பதை வலியுறுத்த, யோவான் சுவிசேஷத்தில் இந்த வார்த்தை அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளது. [18]அமெரிக்க தேசத்தில் ஒரு வேளை, "அவர்கள் பர்கர், ப்ரைஸ் வாங்கி வந்தனர்" எனலாம், ஆஸ்திரேலியாவில், "மீனும், சிப்ஸூம் வாங்கி வந்தனர்'' எனலாம். [19]38-ம் வசனத்தைக் கவனியுங்கள்; ''மற்றவர்கள் பிரயாசப்பட்டார்கள்", இதன் விளக்கம் என்னவென்று நமக்குத் தெரியாது. ஒரு வேளை இயேசு, பழைய ஏற்பாட்டிலிருந்து சமாரியர்கள் மேசியாவைக் குறித்துக் கற்ற காரியங்களைச் சொல்லியிருக்கலாம். சமாரியர்கள் மத்தியில் யோவான் ஸ்நானனின் ஊழியத்தை இது குறிப்பதாகச் சிலர் கருதுகின்றனர்.*

*[20]சமாரியர் "விளைந்து'' நின்றது, இச்சமயம் மாத்திரமல்ல, பிலிப்புவினால் அறுவடை நடந்த போதும் (அப். 8) இது தெளிவாயிற்று. [21]யோவான் 4:36-38. [22]அப். 10:9-16, 34-35.*

## போதகர்கள் மற்றும் ஊழியர்களுக்கான ஒரு குறிப்பு

இது "ஒரு கருத்துப் பிரசங்கம்" ஆகும்; "ஒவ்வொருவரும் முக்கியமானவர்களே." முன்னுரையில் இதை நீங்கள் கூறும் போது, பிரசங்க நேரத்தில், உங்களைக் கேட்பவர்கள் நீங்கள் தரும் சிறு சிறு இடைவெளிகளில் இவ்வார்த்தைகளைக் கூறும் படிக்கு உற்சாகப்படுத்தலாம். அநேக முறை அவர்கள் சத்தமாய் இதைக் கூறும்படி செய்யுங்கள். பின்பு பாடத்தைத் தொடர்ந்து நடத்துங்கள். இடையில் "ஒவ்வொருவரும் முக்கியமானவர் களே'' என்ற வார்த்தைகள் வரும்போது, கேட்பவர்களைச் சொல்ல வையுங்கள். ஒருவேளை ஒரு பேப்பரில் அதை அச்சிட்டு வைத்து, தக்க நேரத்தில் அதை எடுத்துக்காட்டலாம், கேட்பவர்களின் பங்கேற்பு இதில் நற்பலனளிக்கக் கூடும்.